தண்டபாணி தேசிகர்

தோத்திரப் பாக்கள்

சாற்றுக்கவிகள்.

Q26'38:211SP
N33

503

உ

குருவே துணை

சௌரிபாளையம்

# தோத்திரத்திரட்டு

OFFICE OF THE REGISTRAR OF B... 21 DEC 1933 MADRAS

சிரவணபுரம் - திருவாமாத்தூர்க்
கௌமாரமடாலயம்
...வடியவர் மூவர் இயற்றியது

ஸ்ரீமுக ௵ விருச்சிகரவி

Q26:38·2115P N3

1503
OFFICE OF THE REGISTRAR ...
21 DEC 1933
2
MADRAS

உ

குருவே துணை

கோயமுத்தூருக்கடுத்த சௌரிபாளையம்

ஸ்ரீ தண்டபாணிமூர்த்தியின்

# தோத்திரப்பதிகங்கள்

## சந்தக்கவிகள்.

இவை

சிரவணபுரம் - திருவாமாத்தூர்

கௌமார மடாலயம்

அடியவர் மூவரால்

இயற்றப்பட்டன.

சின்னச்சௌரிபாளையம் பாப்பையநாயுடு குமாரர்

தாத்து நாயுடு

இரங்கசாமி நாயுடு மனைவியார்

ஞானம்மாள் என்னும் இவர்களது

பொருளுதவிகொண்டு

சென்னை

கேசரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றன.

17554

654
294.551

OFFICE OF THE REGISTRAR
21 DEC 1933
MADRAS
175579
Q26:32-21L8
N33

# முகவுரை.

## வெண்பா

வண்சவுரி பாளையத்தின் மாதவவி ராமலிங்கன்
பண்சரியையாதிகொண்டு பத்தியுளோர்க்-கெண்சகல
பாக்கியமு நல்குதண்ட பாணிதுதிப் பாடல்கற்போர்
வாக்கிலுறை வாள்வெண் மகள்.

## வசனம்.

"சௌரிபாளையம் தண்டபாணிசுவாமி தோத்திரத் திரட்டு" என்னும் பெயரமைந்த இந்தப் புத்தகத்தில், கோயமுத்தூருக்கடுத்த சிரவணபுரம் கௌமார மடாலயத்தில் விளங்கும் ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகளின் மாணுக்கராகி, அம் மடாலய பரிபாலனம் புரிந்துவருகிற ஸ்ரீமத் - கந்தசாமி சுவாமிகளா லியற்றப்பட்ட தோத்திரப் பதிகங்கள் மூன்றும், சந்தப்பாக்கள் இரண்டும், விழுப்புரம் தாலுகா, திருவாமாத்தூரில் ஞான சமாதி கொண்டு விளங்கும், திருப்புகழ்ச் சுவாமிகள்-முருகதாச சுவாமிகள் என்கிற மஹான் வண்ணச்சரபம், ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகளது மாணுக்கரும் குமாரருமாகி, அந்தச் சந்நிதானத்தில் தொண்டு செய்துவருகிற தி. மு. செந்தினையகம்பிள்ளை யவர்களா லியற்றப்பட்ட பதிகம் ஒன்றும், சந்தக்கவி யொன்றும், அவரது குமாரராயுள்ள, தி. செ. முருகதாசப் பிள்ளையாலியற்றப்பட்ட பதிகம் ஒன்றும், சந்தப்பா வொன்றும் அமைந்துள்ளன. அவற்றுடன்,

"'குருவென்றும், தெய்வமென்றும் பொதுப்படச் சொல்லும் நிலையே சமயாதீதம் என்னத் தகும்" என்ற

ஆன்றோர் சத்தியவாசகப்படி இந்தச் சௌரிபாளையம் என்னும் ஊரில் சற்குருநாதர் திருவருட்டுணையினால், குருவென்றும், தெய்வமென்றும் வேறுபிரித்தலின்றி ஒரே பொருளின் சிறப்பிலக்கணமும், பொதுவிலக்கணமும் என்றறிந்து அநுட்டிக்கும் தமது சமரசநிச்சயத்தின் வெளியங்கமாக, தண்டபாணிமூர்த்தியின் பிரதிஷ்டையும் ஆலயமும் செய்து பூசித்துப் பரம்பரைத் தொண்டர்கள் பாவித்தும், சேவித்தும் பயன்பெறுதற்குரிய சாதனமாகத் தந்தருளிய ஸ்ரீ இராமலிங்கத் தேவரவர்களுடைய சரித்திரச்சுருக்கமும் சேர்த்து அமைக்கப்பெற்றுள்ளது.

பழனித் தண்டபாணிமூர்த்தி, வண்ணச்சரபம் ஸ்ரீலஸ்ரீ தண்டபாணிசுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ இராமானந்தசுவாமிகள், ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள், ஸ்ரீ இராமலிங்கத் தேவர் என்னும் ஐந்துபடங்கள் ஆங்காங்கு சேர்த்துப் பதிக்கப்பட்டுள்ளமை மிக்க சிறப்பாகும். குறிப்பிட்ட பதிகங்களில் இடையிடையே இந்தத்தேவரவர்களுடைய குணவிசேடங்களைப்பற்றிக் கூறப்பட்டிருப்பது காணலாம். சௌரிபாளையமென்னும் பதியானது கோவை நகரத்துக்கு வடகீழ்த்திசை சுமார் மூன்றுமைல் தூரத்திலுள்ளது.

இதனை அச்சிட்டுத் தமிழ் நேயமிக்க கௌமாரத் தொண்டர்களது கண்ணும் மனமும் களிபேருவகையெய்தும் வண்ணம் உதவிய ஸ்ரீ பா. தாத்து நாயுடு, ர. ஞானம்மாள் என்பவர்களுடைய நன்றியை என்றும் பாராட்ட, யாம் கடமைப்பட்டிருக்கிறோம். சுபம்.

ஸ்ரீமுக௵
விருச்சிகரவி
1933 ௵

இங்ஙனம்
வை. சுந்தர ஐயர்,
கேசரி அச்சுக்கூடம் சென்னை.

உ

குருவே துணை

# பதிப்புப்பாயிரம்

---

சிரவணபுரம் - கௌமாரமடாலயம்

ஸ்ரீதண்டபாணி சுவாமி சந்நிதி பூஜைத்திருப்பணி

## ஸ்ரீ சின்னசாமி சுவாமிகள் இயற்றிய

### அறுசீர் விருத்தங்கள்.

விரவிசைராமானந்த குருவருட்சீர்க்கந்தசா மிச்சேய்
வண்ணச், சரபனருள்செந்திநா யகனன்னோன்றருமுருக
தாசச்சேய்மெய்த், திரமுறுமிராமலிங்கற் கருள்சவுரிநகர்க்
குகற்றோத் திரித்தஞான, வரனிசைப்போர்கருள்பாக்
கண் மிக்கவிர்முக்கனிகளின்சா றொப்பாமன்றே. (௧)

இத்தகையபாக்களையச் சிட்டடியார்யார்க்குமன்பி
லீந்தமேலா, முத்தமமெய்ப்புகழருட்சீ ரினர்சிரவைக்கவு
மார வுரிமைச்சங்கப், புத்தமுதுண்டமைதாத்து நாயுடு
ஞானம்மாளாப் புகல்பேர்பூண்டோ, ரொத்தவிருமைப்
பயன்க ளத்தனையுங்குருவருளா லுறுகமர்தோ. (௨)

வரத்தகை ராமானந்த குருவருளாலிராமலிங்கன்
மகிழ்வினுற்றுந்,திரத்ததண்டபாணிதனக் கன்பிலென்றும்
பூசைபுரி திறத்தரொப்பில், சிரத்தையுடனந்தவனஞ்
சமாதியிடத்தாம்பணிகள் செய்வோர்க்கெல்லாம், பரத்
தமைவாழ்வுடனிம்மைப் பயனுநல்கக்குருபரன்றாள் பணி
வேனம்மா. (௩)

---

## திருவாமாத்தூர்க் கௌமார மடாயலம்
## ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் குமாரர்
## தி. மு. செந்திநாயகம் பிள்ளை யியற்றிய

### அறுசீர்விருத்தங்கள்.

தவவுரிமைத்தொண்டர்புகழ் சவுரிநகர்க்கோயிலில்
வாழ் தண்டபாணிக், குவமையில்செந்தமிழால்வண்
சிரவைதிருமாதைநக ருறையுமூவர், பாவுதமிழ்ப்பதிகங்க
ளோரைந்துஞ் சந்தவண்ணப் பாக்கள்நான்கும், விரவுபுக
ழிராமலிங்கப் புனிதனதுசரிதமுடன் விளங்கச்சேர்த்து.

தம்மதுபுண்ணியப்பொருளைச் சாதனமாக்கொடுத்
துலகிற் சான்றோரின்பஞ், செம்மவெழிற்புத்தகமாப்
பதித்தவன்றன்முதல்வருடத் திருவார்பூசை, சம்மதமூற்
றிடுநாளி லளித்திடுதாத்துப்பெயரோன் றகுஞானம்மாள்,
மெய்ம்மறையாகமப்பொருளாங் குருபரன்கட்கருணைகொ
ண்டு மிளிர்கமாதோ. (௨)

அக்கிரகண்ணியக்குரவ னாகுமிராமானந்த வமலன்
பாதம், விக்கினந்தீர்த்திடுதுணையென் றுறுதிகொண்டு
சிரவையிடை விளங்குமேன்மைச், சுக்கிரவாரச்சபையிற்
றொடர்ந்துதிருச்செவியமுது துய்க்குமாண்பான், முக்கிய
மாமிப்பயன்கொண் டனர்பெரியோர்த் துணைக்கொளலே
முதன்மையாமே. (௩)

முற்றிற்று.

உ

குருவே துணை



சௌரிபாளையம்

ஸ்ரீ தண்டாயுதபாணிமூர்த்தி.

உ

குருவே துணை

சிரவணபுரம் கௌமார மடாலயம்

ஸ்ரீ கந்தசாமி சுவாமிகளியற்றிய

# தோத்திரப்பதிகம்

---

## காப்பு

### வெண்பா

தாயிலன்பர்க் காத்தருள்வான் றண்ணருளாற் சௌரிநகர்க்
கோயிலிற்றண் டார்கைக் குருபரன்சீர்—தோயினிமைச்
செந்தமிழ்ப்பாப் பன்னிரண்டு செப்பத் துணையவன்மெய்க்
கந்தமலர்த் தாட்பங் கயம்.

## நூல்

### எண்சீர்விருத்தங்கள்

மலைமகளை யிடப்பாகங் கொண்டவருட் கடலும்
வளர்பொதியக் குன்றின்மிசை வயங்குகுணக் குன்றுந்
தலையின்முடி யாப்புனையுன் றிருவடித்தா மரையென்
சஞ்சலநெஞ் சகத்தினிடை தங்கிடவென் றருள்வாய்
விலையறியா மாமணியே கலையறியாப் பொருளே
மெய்யடியா ரிதயமலர் விரித்தருள்பாற் கரனே
தலையறியா வருட்கடலிற் றழைத்தமைதெள் ளமுதே
சவுரிநகர்க் கோயில்வளர் சற்குருநா யகனே. (க)

மாணுடையார் நின்னருட்சீர் மருவியபே ரின்ப
வாரியின்மூழ் கிடல்கண்டு மற்றதனை மதியா
தாணுடையே பொருளெனக்கொள் வாரைமதித் தவமே
யோடுமனக் குரங்கதன்பின் ஞேடியலைந் தெய்ப்பேன்
நாணுடையார் கொள்வடிவங் கொள்வதினுங் கொடுவா
னரவுருக்கொண் டிருக்கினல்லோர் நகைத்திகழா ரன்றோ
தாணுவழல் விழிவழியே தனயனென வருவாய்
சவுரிநகர்க் கோயில்வளர் சற்குருநா யகனே. (உ)

எண்ணரிய வானகொடுந் துன்பகிறைந் தீற்றி
லில்லைபடுந் தொல்லுலகத் தொல்லையடைந் துள்ளம்
புண்ணமைந்து வாடியதல் லாதுனது பாதப்
போதகத்தி லோர்கிமிடப் போதகிற் பறியேன்
தண்ணமைந்த வுளமுருகு மெய்யடியா ரொப்புந்
தன்மைபடைத் துன்னருட்சீர் தாங்குதற்கென் கடவேன்
தண்ணவனு தவனுடுக்கள் சாரகிமிர் சிகரிச்
சவுரிநகர்க் கோயில்வளர் சற்குருநா யகனே. (௩)

வினைவழியோ ரகட்டில்வருஞ் சிற்சிலவா ருயிர்கண்
மீதிலுளத் தபிமான மிகப்பொருந்தி யுழல்வேன்
நினைவினுக்கோர் வித்தாகி யென்றுமறைக் கணமும்
நீங்காம லோங்கிடுநின் பூந்தாட்கன் பமையேன்
பணியெனவே நீண்டுபராய் மரமெனவே வன்மை
படைத்தொதிபோற் பயனிலதே பார்ச்சுமையா யுற்றேன்
றனையருளா லாள்வதுநின் புகழ்க்கணியாங் கண்டாய்
சவுரிநகர்க் கோயில்வளர் சற்குருநா யகனே. (ச)

குருவடிவாய் வந்துனிரு மருமலர்த்தா ளளித்துங்
குறைவறுபே ரின்பநலங் கொள்ளாதிவ் வுலகிற்
பருவரலுற் றிளைக்கும்வகை புரிவதுமுன் யான்செய்
பவங்கொலல்லா துன்னீதிப்பண்புகொலென் னென்பேன்
கருமணிவண் ணன்கமலக் கண்களிடத் துதித்த
கன்னியர்மத் தியிலவிருங் கனபவளக் குன்றே
சருவநலங் களுந்தொழும்பர்க் கருளவளங் குலவுஞ்
சவுரிநகர்க் கோயில்வளர் சற்குருநா யகனே. (ரு)

காக்கைநரி நாய்கழுகு முதலாம்புள் விலங்கின்
கணங்களுக்கே விருந்தாகிக் கழியுமிழி வமைந்த
வாக்கைதனை நானெனமிக் கபிமானித் தன்பா
லணியாடை புனைந்துசுகந் தாதிதிமிர்ந் தலர்தோய்
சேக்கைமிசை பிணமெனவே கிடந்துதுயின் றிடுவேன்
சீரடியார் பெற்றிடுகின் றிருவருட்கென் புரிவேன்
* சாக்கையரு மறைமுழக்க மங்கலமோ வாச்சீர்ச்
சவுரிநகர்க் கோயில்வளர் சற்குருநா யகனே. (சா)

கணத்தழியுஞ் சுகத்தினவாய்க் கருதுநர்க் கின்றுகிக்
காதல்புரிவா ருளத்தை நோதல்புரி வனவாம்
பிணத்தகைதோய் பொருள்களையுட் பெரிதெனவே கருதிப்
பேயெனவீண் டிரிந்ததன்றிப் பேசுதொ றைம்புலமும்
மணத்தகையாக் கிடுமுனது மலர்ப்பதமோர் கணத்து
மதித்தறியேன் புரிபிழையுண் மதித்தருள்வா ரிதிநீ
தணப்பகினைத் திடிற்பிறிதோர் சார்பறியேன் கண்டாய்
சவுரிநகர்க் கோயில்வளர் சற்குருநா யகனே. (எ)

---

* சாக்கை - புரோகிதன்.

முடையார்புன் புலையொழுக்கார் மடமாதர் தம்மெய்
மூடியதோ லினைவிழியா னுடைமயல் பொருந்தி
நடையார்நெட் டுயிர்ப்பமைந்த பிணமேயொத் தன்னோர்
நவில்பணிகள் புரிந்தவர்பின் னுணமொழிந் துழல்வார்
கொடைநாடித் திரிகவிஞர் தமையகன் றுன் புகழ்ச்சீர்
கொழித்திடுமெய்ப் புலவரவைகூட்டியெனைப்புரப்பாய்
சடைநீண்மா தவப்பெரியோ ரேத்தெடுப்ப வளஞ்சால்
சவுரிநகர்க் கோயில்வளர் சற்குருநா யகனே. (அ)

கடினகுணம் படைத்தவஞ்சக் கயவர்களா யினுமோர்
கதியறியே னுன்றனடைக் கலப்பொருள்யா னென்றே
யடிமைபுகு வோர்புரிந்த பிழைபொறுத்து வேண்ட
லளித்துமுற்றுங் காத்திடுவா ரவனிவழக் கிதுவேல்
நெடியவருட் கடலாகு முன்றகையிற் றெனவே
நிகழ்த்தவடங் குவதாமோ நீயறியா வுளவோ
தடிமுகில்போ லருண்மழைபெய் தன்பர்தமை யாள்வான்
சவுரிநகர்க் கோயில்வளர் சற்குருநா யகனே. (கூ)

மாவாழு முரத்தரியும் பூவாழ்வே தனுமுன்
மலைந்தறியா வடிமுடிதோய் மலைவடிவா னுனும்
நாவார வேத்திடுநின் மூவாமெய்ப் புகழ்ச்சீர்
நரலைமுகந் தெழுமுகிலுண் ணுணமிகப் பொழிந்தே
யோவாது கண்களிநீ ருகுத்துலையார் மெழுகி
னுள்ளமிகக்குழைந் துகரைந் துருகிடவுள் விழைந்தேன்
றுவாத பேரருணீ தந்தருள வேண்டுஞ்
சவுரி நகர்க் கோயில்வளர் சற்குருநா யகனே. (க0)

அன்னமிசை மன்னுபிர மாவுமண மலரம்
பைந்துபடைத் துலகமெலா மரசுசெய்மன் மதனு
மின்னன்மர ணந்தருமந் தகனுமெது போது
மிடையறத்துன் பியற்றுவதா லிதயமிகத் தளர்ந்துன்
பொன்னடிகட் கடைக்கலமா னேன்சிறுநா யடியேன்
புரிந்தபிழை யத்தனையும் பொறுத்துமறை முடிதோய்
தன்னனின் சேவடியென் சென்னிமிசை யமைப்பாய்
சவுரிநகர்க் கோயில்வளர் சற்குருநா யகனே. (கக)

வானவின்மெய்ச் சீர்கொளிரா மானந்தப் பெருமான்
வாரிசத்தாட் டுணையன்புண் மருவுமிரா மலிங்கன்
தானவிற்றும் பணியுவந்து திருவருளீந் தாள்வான்
சவுரிநகர்க் கோயில்வளர் சற்குருநா யகனைத்
தேனவிழ்பூம் பொழில்வளஞ்சால் சிரவணமா புரந்தோய்
சீலவருட் கவுமாரர் திருவடித்தா தணியும்
மானவடி யேன்கந்த சாமிநுவல் பதிகம்
வழுத்துவர்சற் குரவனருண் மாட்சியுடை யாரே(கஉ)

முற்றிற்று.

---

## சந்தக்கவி.

தனன தானன தானன தனதானு

மடல்குலாவிய தாமரை-நிகருனுதிரு தாள்களை
மனதிலோர்கண மாயினு மகலாதே
மருவுசீலத போதன-ரனையவேடநி லாவியு
மகிமைமீடிய பேரரு ளிலதேயான்

விடமிலாவர வேயென - வுலகரேசிட லாலுறும்
விவிதவாகுல நீயறி கிலேயேயோ
விரிகலாபசி காவள - முதுகிலோர்தர மேனுமென்
விழிமுனீவரி லார்தடை புரிவாரோ
கடலின்மீதணே கோலிமு - னடலிராவண னேவிய
கணிதமீறிய சேனேயொ டிருநாலீர்
கனகமாமுடி யார்தலே - விலகவாளிபெய் காமீரு
கருமை மேனிகொண் மாதவன் மருகோனே
சடலநானென வாணவ - விருளின்மூழ்கெனே மாதவர்
சபையினூடமை வானருள் குருநாதா
சரியையேமுத லாகிய் நெறிவிடாவடி யார்பொலி
சவுரிபாளைய மேவிய பெருமாளே.

---

## வாழி கலிவிருத்தம்

வாழ்க சௌரிநற் பதிவளர் தண்டணி வரதன்
வாழ்க சேவல்வேன் மயில்பொலி கோயிலின் வளச்சீர்
வாழ்க சீரிரா மானந்த னன்பிராமலிங்கன்
வாழ்க மெய்க்கவு மாரர்கள் புகழ்நலம் வளர்ந்தே.

குருபாதமேகதி.

9

உ

குருவே துணை.



சிரவணபுரம் கௌமாரமடாலயம்
ஸ்ரீ கந்தசாமி சுவாமிகள்

உ

குருவே துணை

# தோத்திரப்பதிகம்

## காப்பு

### வெண்பா

பாவலர்வாழ்த் துஞ்சவுரி பாளையம்வாழ் தண்டணிகைத்
தேவன்மிசை யோர்பதிகஞ் செப்புதற்குக்—காவலெனத்
துள்ளும் புறத்து மொளிருமிரா மானந்தன்
கள்ளுகுக்கும் பாதமலர் கள்.

## நூல்

### எழுசீர் விருத்தங்கள்

அருண்மழைபொழிகண் களுநகைவாயு மவிர்முக மதியுமொண் பவளப், பருவதமனைய வடிவமும் வேலும் பதங்களுமுளங்கொளப் பணிப்பாய், தருவளரமரர் துயரறச்சாடுந் தன்மைபோன்மாயைநல் கிடுவெம், பருவரன் மாந்தர்க் கொழித்திடச்சவுரிப் பதிவளர்தண்டபா ணியனே. (க)

தாகநோயொழிக்கக் கருதுபுகங்கை தாண்டியேசலதியைத் தேடி, வேகமிக்கோடு வானிலுன்னருளை விட்டிருண்மாயையிற் சுழன்றேன், நாகநாட்டமர ராங்கமையரம்பை நங்கையராசைவிட் டணையும், பாகமாரரம்பைத் தண்டலைச்சவுரிப் பதிவளர்தண்டபா ணியனே. (உ)

மறையினமன்பர்க் கெளியவனென்ன வருக்கரீயதற் கெதிர் மறையா, முறைகொடாணவர்க்கு மருளலினூனது மூதருட்கெல்லையின் றுணர்ந்தேன், தறையுளோர்க்குரு வாய் நாதமேற்செலுத்துந் தன்மையிற்றெண்டக நாமப், பறையொலிக்குறிஞ்சி யேற்றருள்சவுரிப் பதிவளர்தண்டபா ணியனே. (ரு)

கன்மமிக்கலைக்கு முலகைநீத்தன்பர் கணத்துளெய்தி யும்பழ வினைநேர், தன்மசங்கடங்கொண் டுழன்றனன் மாயைச் சளங்கெடவுளங்கொள்வாய் சரணம், மன்மதன் சேம விற்றிரட்பணைகள் வாளிதோயாவநா ழியிலார்,பன் மலர்வாவி காவியல்சவுரிப் பதிவளர்தண்டபா ணியனே.()

வெஞ்சரமனைய விழியினர்பாவ மெய்விழைந்துழலு மென் மனநின், செஞ்சரணத்திற் புக்கமையின்பிற் றினைத் திடத்திருத்தியாண் டருள்வாய், குஞ்சரமுகன்மெய்த் துணைவனேவள்ளி குஞ்சரிதுணைவனே யென்னப், பஞ்சரக் கிளிகள் கொஞ்சுசீர்ச்சவுரிப் பதிவளர்தண்டபா ணியனே.

கொடியவனிவனுக் கருளினம்புகழ்ச்சீர் குன்றுமென் றெண்ணிடே லுந்தை, முடிவில்பாதகற்கு மருளியேகருணை மூர்த்தியென் சீர்த்திமிக் கேய்ந்தான், நெடியபேரண்டத் தொகுதிசெய்பிரம னேர்தருபதுமநா பன்றன், படிவ நேர்சிகரித் தளிபொலிசவுரிப் பதிவளர் தண்டபா ணியனே. (சா)

துக்கவைப்பாம்வல் வினைமலக்கூட்டுட் சுழலுமென் றனக்குநின் றுணைத்தாள், புக்கமெய்த்தொண்ட ருளத் தியலின்பம் பொருத்தியாண்டிடுதினம் புகலாய், தக்கவிந்

திரன்வாழ் சொர்க்கமாம்பஞ்ச தருக்கொள்வானுலகது சாலப், பக்கமென்றிடவோங் கியபொழிற்சவுரிப் பதி வளர்தண்டபா ணியனே. (எ)

நாத்திகவாதம் பிதற்றுமங்காடி நாயனுர்நடுங்கருட் சித்திப், பாத்திரந்தொனிநன் ஞத்திரமெய்தப் பாவியேற் கருளுநாள் பகர்வாய், கோத்திரங்குலமெய்ம் மானமுற் றெருவிக் குருவருணெறிமரு விடுசற், பாத்திரத்தவர்சூழ் மகிமைதோய்சவுரிப் பதிவளர்தண்டபா ணியனே. (அ)

பித்துறுகுரங்கை யொத்துழன்மாயப் பேய்மனப் பிணக்கமுற் றொழித்துச், சத்துவகுணமும் பத்தியின் பொலிவுந் தத்துவவுணர்வுமீங் தருள்வாய், முத்துறழ் நகையா ரேடணைமுதலா மூன்றுமற்றெப்பில்புண் ணியங் கள், பத்துமோங்குநர்க ளோங்குசீர்ச்சவுரிப் பதிவளர் தண்டபா ணியனே. (கூ)

நயங்கொள்வானமுதத் திரட்சிநேரின்ப நறுந்தமிழ்க் கவிகள்பற் பலவா, வியங்கொளுன்றிருத்தாட் கணிய வெண்ணிடுமென் வேட்கைவல்விரைவினல் கிடுவாய், செயங்கொள்வெண்சேவற் கொடித்தொனிகிள்ளை திருப் புகழோதைசே டனுளப், பயங்கொளக்கலந்து முழங் கணிச்சவுரிப் பதிவளர்தண்டபா ணியனே. (க0)

பொத்தியமலக்கூ டோம்பிநாள்போக்கிப் புழுங்கு மென்மனத்தினுட்பொருவில், சத்தியத்தொண்டர்பேரரு ளாண்மை சார்தரப்புரியுநாள் சாற்றுய், பொய்த்தியக் கொழித்துக் குருபதத்துள்ளம் பொருந்திராமலிங்க மெய்ப்புனிதன், பத்திதோயடியர் பணிபொலிசவுரிப் பதி வளர்தண்டபா ணியனே. (கக)

ஞாலமும்வானும் புகழிசையிராமா னந்தசற்குருவென விளங்கிப், பாலனென்றெனைப்பா லனம்புரிசவுரிப் பதிவளர்தண்டபா ணியனைச், சாலருட்பண்பிற் சிரவை தோய்கந்த சாமியான்றுத்தியம்புரிபா, சீலமென்றுவந்து துதிப்பவரினிதாஞ் சித்திமுற்றெய்தல்சத் தியமே. (கஉ)

முற்றிற்று

---

சந்தக்கவி.

தனனதானனதனன தானனந்தந்ததன தனதானா.

கனகமே ருவையனைய தேசுமிஞ் சின்பனிலை
பெறுதபோ மகிமைபொலி சீலநெஞ் சங்குலவு
கனமுளோ ரணியுமுயர் வேடமொன் றங்கமொடு
மனமீதே

கமலமேல் வருமகளிர் நேரெனும் பண்புடைய
மடமினர் வடிவமிசை யாவல்கொண் டென்றுமெரி
கனலின்மீ தமையிழுதி லோவருந் துன்புகொடு
சுழலுறுவேன்

அனகமா தவநிலவு மேன்மைதுன் றும்பெரியர்
முடியின்மீ தணிபதச ரோருகங் கொண்டிலகு
மருணைமா நகரின்முது கோபுரந் தங்குமுயர்
பெயோனே

அருள்விலா சமதடையு மாறுநின் பண்குலவு
மறையின்மேன் முடியெனவி ராவுதுங் கந்திகழ்பொ
னடிகளோர் தரமுடியின் மீதிலங் கும்படிசெய்
தருள்வாயே

வனசமேல் வதியும்விதி யாணவங் குன்றும்வகை
சிரசின்மோ துபுசிவனொர் காதிலன் றன்பொடுயர்
மறைவிள்பே ரருளுருவ னேசெயந் தங்குகதிர்
வடிவேலா

மகதியா ழிலகுகர நாரதன் கண்டமக
மிசைகுலா வியதகரின் மீதிவர்ந் தண்டர்பய
மருவுறு தருளில்விளை யாடிடுந் திண்டிறல்கொண்
முருகேசா

தனமினர் மனைவியுற வோரெனும் பந்தமொடு
புவியினா டௌமலைவு ருமலன் பின்பெரியர்
சமுகமே விடவருட யாநலம் பொங்கும்விழி
யுறுதேவே

சரதநீள் குருவலதொர் தேவுமின் றென்றுதெளி
சமரசா நுபவமலி மேன்மைதந் தும்பர்புகழ்
சவுரிபா ளையமிசையி ராமலிங் கன்பணிகொள்
பெருமாளே.

---

### வாழ்த்து வெண்பா.

தண்டணிகைச் சேய்வாழ்க சௌரிப் பதிவாழ்க
விண்டமைசிர்ச் சேவன்மயில் வேல்வாழ்க-தொண்டருடன்
மாட்சி யிராமலிங்கன் வாழ்கதிருக் கோயில்விழா
காட்சிகொண்டேக் காலமும் வாழ்க.

உ

குருவே துணை

# ஸ்ரீ தண்டபாணி மூர்த்தி

புநர் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக

# வைபவ வாழ்த்துப்பதிகம்

---

## காப்பு

### வெண்பா

உம்பர்க்குச் சூரனியற் றாறகற்றி யூர்த்தருக்கண்
சம்பத் தருள்சேய் சவுரிநகர்க்—கும்பப்
புனலாடி யுட்குளிர்சீர் போற்றவவ னேயென்
மனமீ தமைந்தருளு வான்.

## நூல்

### கலித்தாழிசைகள்.

நலமெய்த்தவ வடியாரருண் ஞானத்திரு வுளமாஞ்
சலசம்புரை சவுரிப்பதித் தண்டாயுதக் குகவேள்
நிலமுற்றவி ருயிர்முற்றவு நிரப்பற்றுய ரின்பங்
குலவும்படி கும்பப்புன லாடிக்குளிர்ந் தனனே. (க)

துயரப்பெரு வாரிக்கிடை சுழலாதடி யார்பாற்
றயவுற்றருள் சவுரிப்பதித் தண்டாயுதக் குழகன்
மயல்வெப்புல ககலும்படி வள்ளிக்கொடி களபக்
குயமொத்தவிர் கும்பப்புன லாடிக்குளிர்ந் தனனே. (உ)

பொங்குந்துய ரமைவோர்மனம் பொங்குஞ்சுகக் கடலுள்
தங்கும்படி சவுரிப்பதித் தண்டாயுதக் குரிசில்
சங்குந்திய மந்தாகினி தருகாவிரிக் கமலக்
கொங்குந்திய கும்பப்புன லாடிக்குளிர்ந் தனனே. (ங)

12 A



சிந்தாகுல முழுதற்றுயிர்த் திரளிச்சைகள் பெறவே
தந்தாளியற் சவுரிப்பதித் தண்டாயுதக் கந்தன்
பந்தாமுலை யுமையாள்சிவன் படிவுற்றவிர் சூதக்
கொந்தார்திருக் கும்பப்புன லாடிக்குளிர்ந் தனனே. (ச)

ஆரத்திரு வரையானிலை யடிதாழுமன் புடையோர்
சாரத்தருஞ் சவுரிப்பதித் தண்டாயுதக் குமரன்
கோரத்தகு வரைநேர்பவர் குமையத்தவ ரின்பங்
கூரத்தனிக் கும்பப்புன லாடிக்குளிர்ந் தனனே. (ரு)

உழையொன்றிய கரஞ்சேர்பர னுரமொத்திய வின்பந்
தழையும்புகழ்ச் சவுரிப்பதித் தண்டாயுதக் குரவன்
பிழையின்றிய தவரேயெனப் பேய்போல்பவ ருளமுங்
குழையும்படி கும்பப்புன லாடிக்குளிர்ந் தனனே. (சு)

இணருற்றவி ரெரிநேர்துய ரிகமேலனு காதே
தணவும்புகழ்ச் சவுரிப்பதித் தண்டாயுதக் கரச்சேய்
மணமிக்கமை யடிதோயிரா மானந்தசற் குரவன்
குணமொத்தியல் கும்பப்புன லாடிக்குளிர்ந் தனனே. (எ)

துளிகொண்டுள முருகுந்தவத் தொண்டாளர்கையிடுதண்
டளிர்கொண்டருள் சவுரிப்பதித் தண்டாயுதக் கோமான்
விளிதுன்பமு மினிதென்றிட வெம்பாருயிர்த் திரளுட்
குளிரும்படி கும்பப்புன லாடிக்குளிர்ந் தனனே. (அ)

மட்டுந்துபொன் னடிபோற்றுநர் மனமார்துய ரறவே
தட்டும்புகழ்ச் சவுரிப்பதித் தண்டாயுத முருகோன்
வெட்டுங்கிண றறலற்றுலர் மிடிதீர்தர மேகங்
கொட்டும்படி கும்பப்புன லாடிக்குளிர்ந் தனனே. (கூ)

நிறைமாதவத் தினர்தோயுயர் நிலையுடமை யின்பந்
தறையோர்க்கருள் சவுரிப்பதித் தண்டாயுதத் தலைவன்
மறையோதிய நலமுற்றவு மறையாதுல கிடையே
குறைதீர்தரக் கும்பப்புன லாடிக்குளிர்ந் தனனே. (க௦)

ஞாலந்தரு துயரங்கொளஞ் ஞானக்கொடு மாயா
சாலந்தவிர் சவுரிப்பதித் தண்டாயுதக் கடவுள்
சீலம்பொலி பரிபூரணத் திருமேனிமுற் றவுமெய்க்
கோலம்பொலி கும்பப்புன லாடிக்குளிர்ந் தனனே. (கக)

தெளிக்கும்மது மலர்கொண்டுனைத் தினம்பூசை செய்துள்ளங்
களிக்குந்தவம் பொலிராமலிங் கன்செய்பணி யமையுந்
தளிக்கொன்பெறு சவுரிப்பதித் தண்டாயுத னருள்யாம்
குளிக்கும்படி கும்பப்புன லாடிக்குளிர்ந் தனனே. (கஉ)

சமர்வேற்புயன் சவுரிப்பதித் தண்டாயுதப் பரன்குங்
குமமாரமொல் கும்பப்புன லாடிக்குளிர்ந் தருள்சீர்
சிமயம்பொலி சிரவைப்பதிச் சிறுவன்சொலல் கொள்வா
ரமராவதி யிமையோர்பொழி யலரிற்குளிப் பாரே. (கங)

---

புநர் அஷ்டபந்தன

## கும்பாபிஷேக கால விளக்கம்

### எழுசீர் விருத்தம்

கலியையாயிரத்து முப்பதிற்றிரண்டிற் காண்பிரமோ
தூத வாண்டில், வலிகொள்சிங்கரவி நாள்பதினென்பான்
வருகுருவாரமுத் திராட, மொலிதுவாதசியி லன்பர்க
ளின்ப மோங்கிடச்சவுரிபா ளையத்திற், பொலிபுகழ்த்
தண்ட பாணியன்கும்பப் புனன்முழுகினனருள் புரிந்தே.

**தெய்வமேதுணை.**

உ

குருவே துணை



மஹான்-வண்ணச்சரபம்

ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகள்

உ

குருவே துணை

திருவாமாத்தூர்க் கௌமார மடாலயம்,

தி. மு. செந்திநாயகம்பிள்ளையவர்களியற்றிய

# தோத்திரப்பதிகம்

---

## காப்பு

### வெண்பா.

பற்பலசீர் சால்சவுரி பாளையத்துக் கோயிலில்வாழ்
சிற்பரவேட் கோர்பதிகஞ் செப்புதற்குத்—தற்பதமுஞ்
சுத்த வசிபதமுந் தோயவருள் சற்குரவன்
பத்தர்பதப் பூந்துகள்காப் பாம்.

## நூல்

### எழுசீர் விருத்தங்கள்

பருவதசிரந்தோ றருணடம்பயிலும் பதுமநேருன
திரு பதங்கள், கெருவவா ரிதியிற் சுழலுமென்றலையிற்
கிளர்தரச்சூட்டுதற் கிசைவாய், கருணைநற்பத்தி கலந்து
வைராகங் கடந்தகௌமாரர்கண் காணக், குருகுலாம்
பொதும்பர்ச் சவுரிபாளையம்வாழ் குருபரக்குமரநா
யகனே. (க)

மறையவன்கதறச் சிரத்தினிற்புடைத்து வன்றளைப்
படச்செயு முனையே, நிறைமனத்துடன்பன் மலர்புனல்
கொடுநா ணித்தமும்பணியும்வாழ் வருள்வாய், தறைமுத

னுலக முழுதுமோர்நொடியிற் சார்ந்துமீள்சிகியுடைத் தலைவா, குறைவிலார்பணியுஞ் சவுரிபாளையம்வாழ் குரு பரக்குமரநா யகனே. (உ)

இந்திராதியர்மு னவுணரால்வருந்தி யிளைத்தநாள் கனற்கணு னுதற்பால், வந்திகலொழித்துக் காத்தநின் புகழே வழுத்துசீர்வழங்கிட நினைவாய், மந்திராகரச்சண் முகன்குருவெனவே மதிப்பவர்மகிழ்வுற மணப்பூங், கொந் திலங்கியசீர்ச் சவுரிபாளையம்வாழ் குருபரக்குமரநா யகனே. (ங)

அஞ்சனக்கருங்கண் மங்கையர்மயலா லலமருமிரு ளறத் தவிர்த்துன், கஞ்சநாண்மலர்த்தாள் கருதிநெஞ் சுருகுங் கனதவப்பெருமையெற் கருள்வாய், செஞ்சரோ ருகத்தாள் கணவன்வானவர்பாற் செப்பியபுகழெலா முடையாய், குஞ்சரத்திரள்சேர் சவுரிபாளையம்வாழ் குரு பரக்குமரநா யகனே. (ச)

செச்சைகூதளஞ்செங் கடம்புறழ்தமிழாற் றினமு னைத்துதித்திடுஞ் சீரே, யிச்சையாவையுந்தீர்த் தினிப்பிற வாவீ டெளிதினிற்றருமென விழிவோ, பச்சைமாமயிலின் பீலிகைக்கொள்ளும் பாழ்முகப்பதிதர்வாழ் வொழிக்கக், கொச்சையூர்ப்பிறந்தாய் சவுரிபாளையம்வாழ் குருபரக் குமரநா யகனே. (ரு)

பாடிடேனென்னும் வயிணவப்பனவன் பயங்கொளப் பருந்தனை பூட்டி, நீடியதமிழ்ப்பா நிகழ்த்தவைத்தருள் செய் நிசம்பிழையெனச்சொலன் முறையோ, வாடியேன விற்கைக் கவண்கொள்வாளெதிரில் வார்த்திகத்தவமுனி

வடிவாய்க், கூடியதலைவா சவுரிபாளையம்வாழ் குருபரக் குமரநாயகனே. (சு)

என்புதோலிரத்த மிசைந்தவிவ்வுடலை யானெனதெனக்குறித் திதற்கே, யன்புசெய்தலைவே னுன்னடியவர்கொளாநுபவம்பொருந்தவென் றருள்வாய், வன்புலாம்வயிரவேலுளான்வளர்த்த வாரணப்பிடிமகண் மருவுங், கொன்புனைபுயத்தாய் சவுரிபாளையம்வாழ் குருபரக்குமரநா யகனே. (எ)

கற்றமேலவர்தஞ் சபையிடைபுகுந்து கழறுநூற்பொருள்கருத் தமைத்துச், சொற்றவாறநுட்டித் துறுபயன்பெறுமோர் தூயமாண்பெனக்குறத் தொகுப்பாய், நற்றவக்கிளிப்பா வலன்றிருப்புகழ்ப்பா நவின்றுதாள்பணியுமெய் யடியார், குற்றமுட்குறியாய் சவுரிபாளையம்வாழ் குருபரக்குமரநா யகனே. (அ)

பாதகத்தொழிலே பயின்றிடுகொடியோர் படையறத் தொலைக்குநற் பான்மை, பூதலத்திடையோ ரன்பனுக்கருளிப் புண்ணியப்பொலிவுறப் பொருத்தாய், காதளவமையுங் கருங்கண்மங்கையர்தங் கருத்தெலாமுருக்குதோள் கமழுங், கூதளத்தொடையாய் சவுரிபாளையம்வாழ் குருபரக்குமரநா யகனே. (கூ)

முகமிருமூன்றுந் திசைகண்முந்நான்கா மொழிபுயமகப்புறச் சமயந், திகழுமாகமவே தங்களின்முடிவே திருவடித்துணையெனத் தெரியேன், மகரகுண்டலஞ்சேர் செவியின்மெய்யடியார் வழுத்துவிண்ணப்பமேற் றருள்சீர்க், குகனெனும்பெரியாய் சவுரிபாளையம்வாழ் குருபரக்குமரநா யகனே. (கo)

மலையமாமுனிவன் கலையதாயுலகில் வந்தராமானந்தக் குரவன், விலையின்மெய் யருளாற் றலைமையாம்பலசீர் மேவி ராமலிங்கமே லவன்சொல், நிலையினின் றுனது பணிசெயும் புனிதர் நிறைநலமுறக்கடைக் கணிப்பாய், கோலைபுலையி லர்சூழ் சவுரிபாளையம்வாழ் குருபரக்குமரநா யகனே. ()

கோலமாளிகைசூழ் சவுரிபாளையம்வாழ் குருபரக் குமரநா யகனைச், சீலமார்மாதைத் திருப்புகழ்க்குரவன் சேயனுஞ்செந்தின யகன்சொல், பாலனதமிழின் பாடல் பன்னுென்றும் படித்திடும்பத்திமை பதிந்தோர், காலனுல் வருந்தாக் கதியினிற்புகுந்து களிப்பதற்கையமொன் றிலை யே. (கஉ)

முற்றிற்று.

---

சந்தக்கவி.

தனனதானன தானனதந்தந் தனதானு.

கருணைநீரனு வேனுமில் வன்பொன்
றியவுலோபியர் வாய்தொற லைந்தின்
கவிசொல்பாவல ராமவர் பின்சென் றுழலாதே
கலசமாமுனி யீசன்வி ரிஞ்சன்
பரவுதேசிக னுமுன தம்பொன்
கழல்சதாநினை மேனிலைகொண்டிங் கமையேனே
குருவலாதொரு தேவிலை யென்றுஞ்
சமயகோடியெ லாமவனெஞ்சின்
குலவுபேரரு ளாமெனவுஞ்சிங் தனையூடே
கொடுசமானமி லாதொளிரும்பண்
புளகெள மாரவிநோதர்வி ரும்புங்
குறிகொ ணீறுகெள பீனமொர் தண்டொன் றிடவாராய்

தோத்திரத்திரட்டு

175574 உ

அருணை மாநக ரூடுபி றங்கும்
பழைய கோபுர மீதிலிருந்தன்
றவனிமேல்விழு வான்முன விர்ந்தின் பருள்வோனே
யரிய வேனல்வி ராவித ணின்கண்
கவணெ டோர்குயில் போல்பவள் கண்டன்
றலற யானைமு னேர்தல்செய் தின்பம் புணர்வோனே
தரும நீர்நிறை வாவியி லென்றுந்
திருமின் வாணிகு லாவிருகஞ்சந்
தகைசெய் சீர்கொடி ராமலிங்கன் பணியாலே
தணிவில் பேரருள் வீறு துலங்குஞ்
சிரவை போலடி யார்பலர் தங்குஞ்
சவுரிபாளையம் வாழ்வு பொருந்தும் பெருமாளே.

## காலவிளக்கம்.

### கட்டளைக் கலித்துறை.

Q26:58:21 N33

சுக்கிலமீன மதிபன்னிரண்டினிற் றேன்றுசெவ்வா
யக்கிரஞ்சேர்திரு வோணஞ்சவுரி யணிப்பதிவாய்
விக்கிரகப்படி வக்குருவாகி விளங்குசெவ்வேள்
வக்கிரந்தீர்திரு வாசிகைசூடு மகாதினமே.

## வாழ்த்து

### வெண்பா.

சற்குரவன் வாழ்க சவுரி நகர்வாழ்க
விற்குலவு சேவன்மயில் வேல்வாழ்க—பொற்குவடு
போலவிருஞ் சிந்தை பொலிராம லிங்கதவ
சீலனன்பர் வாழ்க தினம்.

உ

குருவே துணை

திருவாமாத்தூர்க் கௌமார மடாலயம்
தி. சே. முருகதாசப்பிள்ளை யவர்களியற்றிய

# தோத்திரப்பதிகம்

---

## காப்பு

### வெண்பா.

சவுரிநக ரிற்குலவு தண்டணிகைச் செவ்வேள்
கவுரி யருண்மகவாங் கந்தன்—பவுரிசெயுந்
தோகைமயி லான்சீர்த் துதிமிகநன் ருகவவன்
வாகைவடி வேலேநினை வாம்.

## நூல்

### அறுசீர்த் தாழிசைகள்

காவிமலர்க்கிணை கூறுமினார் கண்வலையூடு கலங்குறுநா, னீவிரை விற்றரு சேவையினு னின்மலவாழ்வு பொருந்துவனோ, கூவிளம்வன்னிமந் தாரைசமி குலவு சடைப்பர மன்வினவத், தாவிலொர் சொற்பொரு ளன்றுரைத்தாய் சவுரிநகர்த்தண்ட பாணியனே. (க)

வெம்பந்தமாம்விலங் காற்றமியேன் வீக்கிடப்பட்டதனுலனையே, நம்பந்தவேலையிற் சோம்பியுற்றே னல்லருள் பெற்றமை நாளுளதோ, நிம்பந்தனைப்புயத் தன்றணிந்

உ

குருவே துணை,



சிரவணபுரம் கௌமாரமடாலய ஸ்தாபகர்
ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள்

தாய் நிந்தைசெய்சாரணர் வம்பறுப்பான், சம்பந்தனாக வந் தாடல்செய்தாய் சவுரிநகர்த்தண்ட பாணியனே. (உ)

பாரகத்திற்பொருள் புவிமடவார் பற்றமைந்தே தினம் பரதவித்தேன், கோரநமன்றம ரான்மெலியாக் கொற்றமென்பாலுறக் கூட்டிடுவாய், சூரபன்மன்சிங்க மாமுகவன் றேய்கிரவுஞ்சப் பெயர்க்கிரிவன், றூரகன்மா ளவைவேல்விடுத்தாய் சவுரிநகர்த்தண்ட பாணியனே. (ங)

சலசமலர்ப்பிர மன்கரத்தாற் சார்பிறவிக்கடல் வற்றி டுமா, நிலகுநின்கூரயிலுய்த்தடியே னின்னலறச்செயற் குன்னிடுவாய், குலவியன்மதுரையின் மீதமரர் கோனமூக் காற்றினில் விடுங்கொதிநீர்ச், சலதிமுன்சுவறச்செய் தாய லவோ சவுரிநகர்த்தண்ட பாணியனே. (ச)

சந்தனப்பொதியைமெய்த் தவர்பெருமான் றந்ததமிழ்க் கவியாலுனையே, யுந்தறிவுடன்றுதித் தேத்திடுசீ ருற்றிடச் சற்றருள் செய்திடுவாய், கந்தவண்கடம்பணி திண்புயனே காரெதிர் நட்டமி டுஞ்சிகியுந், தந்தவெண்களிறும்வெந் தகருமுளாய் சவுரிநகர்த்தண்ட பாணியனே. (ரு)

பதுமமலர்க்கண் முகுந்தனைநேர் பான்மைபடைத் துல கிற்கொடியோர், குதுகுலமாற்றி யுயிர்க்கிதமே குயிற்றுநலங்கொடுத் தற்கிசைவா, யதுலமறைக்குமு தற் பொருளா யவிருமெழுத்துறு பொருடெரியாச், சதுமுக னைவிட் டழப்புடைத்தாய் சவுரிநகர்த்தண்ட பாணியனே.

சிரவணமாபுரப் பொற்சபையிற் றிகழ்குருவாகவந் தேற்றுமுளத், * திரவணமுற்றமொ ழிந்திலதாற் செயி

* திரவணம் - வெப்பம்.

ருறுமென்னிலை தேர்ந்திலையோ, குரவணவும்புயங் கொள்
குமராகூறுமொராறுகு ழந்தையெனச் சரவணப்பூந்தடத்
திற்றவழ்ந்தாய் சவுரிநகர்த்தண்ட பாணியனே. (எ.

அரதனமௌலிமன் னவர்திருவு மகித்தியமென்னவ
றிந்திலன்வண், பரதம்வெற்பினந்தொறுஞ் செய்புனடிப்
பங்கயஞ்சென்னியிற் பதிப்பதென்றோ, வரதமபயமவிர்
கைக்குகனே வருத்திடுங்கொலைபுலை வம்பகற்றுஞ், சரத
கௌமாரர்க ணம்பரவுஞ் சவுரிநகர்த்தண்ட பாணியனே.

பூமகணுமக டங்கணருள் பொருந்தவிழைந்துனைப்
போற்றுகின்றேன், றுமதமின்றியென் மீதிரங்கித் தயை
புரிந்தென்வினைச் சளந்தவிர்ப்பாய், காமனுநாணெழிற்
சண்முகனே கதிரயிலேந்துசெங் கைக்குகனே, தாமநறுங்
கடம் பார்புயனே சவுரிநகர்த்தண்ட பாணியனே. (கூ)

உழைக்கணந்தோய்பொதி யைத்தமிழா லுன்னிசை
யாவும்வி ரித்துவிடா, மழைக்கனமென்றிடப் பெய்திடுசீர்
வாய்த்திடத்தக்கவ ரந்தருவாய், புழைக்கரத்தாற்கிளை
யாய்தினமும் போற்றுநர்க்கிகபர சுகமுழுதுந், தழைக்க
வரந்தருங் கருணையுளாய் சவுரிநகர்த்தண்ட பாணியனே.

நீற்றணிமேனியுங் கோவணமு நிறைதருகீளும்பொற்
பாதுகையு, மாற்றறியாதகண் டிகைசிகையும் வண்கையிற்
றண்டும்வ யங்கவந்தாள், கூற்றனுகாத்தவ சீலருள்க்
கோயிலின்மேவருட் கொற்றமுளாய், சாற்றணியென்றும்
றுப்புகழ்தோய் சவுரிநகர்த்தண்ட பாணியனே. (கக)

குராமலர்வெட்சிகொள் பதத்துணையைக் கொற்ற
மலிந்தபன் னிருபுயத்தைப், பராவியன்பால்வழி பாடுசெய்

சீர் பதியவைத்தின்பமெய்ப் பயன்றருவாய், இராமலிங்கப் பெயர்த் தொண்டனன்பா ரேவலர்செய்பணியேற்றருளத், தராதலத்திற்றிருக் கோயில்கொண்டார்ய் சவுரிநகர்த் தண்ட பாணியனே. (கஉ)

வண்ணநற்சரபன்றன் பவுத்திரனு வந்திராமானந்த வள்ளலிரு, கண்ணருளெய்துநர் களிலமைந்து கவினுறு முருகதா சன்கனிவாற், றண்ணளினத்தடஞ் சாரும்வளச் சவுரிந கர்த்தண்ட பாணியன்மேற், பண்ணமையப்புகல் பதிகங்கற்போர் பற்பலசீர்களும் படைப்பவரே. (கங)

முற்றிற்று.

---

## சந்தக்கவி.

தனதனதானன தந்தந்தனனத் தனதான

கருணையிலாதுயிர் கொன்றுண்டிடுதுற்
சனர்தமைவேரொட கழ்ந்தம்புவியிற்
கவினறம்யாவும்வி ளங்கும்படிபொற் பமையேனே
கமலனைமேதிகொள் வன்சண்டனையிக்
குறுகரமாரனை வென்றுண்பெறுமெய்க்
கதியிடையானுற வுன்சிந்தையினிற் கருதாயோ
அருணனெனுவொளி தங்தொண்டவளப்
பொடியணிமேனிவி யன்றண்டணிபொற்
பமைகரம்வேல்சுக மொன்றும்புயமுற் றிடவேசீ
ரவிரிருபாதுகை தங்கும் பதுமக்
கழல்சிகைகிள்புனை யும்பண்புடன்முற்
றணிதிகழ் சேவை மூங்குந்தினமெற் கறைவாயே

பெருகிய வாணவ மொன்றுங் கருமப்
பிரமன்முராரிக லங்கும்படிமுற்
பெரியவொர் சோதியி னின்றன்றவிர்முக் கணன்வானூர்

பிறைசமிகூவிள மந்தண் புனல்கொக்
கிறகணியீசனு ணர்ந்தின் புறமுற்
பிரணவமூடுபி றங்கும்பொருள்சொற் றருள்வோனே

திருமதுராபுரி யின்கண்சமணப்
பெருகிருளோடவி ளங்குங்கிரணத்
திரள்விடு பானுவின் முன்சண்பையினிற் றிகழ்சேயே

செறிபொழில் வாவிவ யங்குஞ்சவுரிப்
பதியிலி ராமவி லிங்கன் பணியத்
திருவுருவாகி யிலங்குங்குமரப் பெருமாளே

## வாழி

### வெண்பா

வாழ்க சவுரிநகர் வாழ்க இராமலிங்கன்
வாழ்கவிரா மானந்த வள்ளலருள்—வாழ்க
அடியார் குழாமும் அருணீறு கண்டி
இடியா ரொலித்தமிழு மே.

தெய்வமேதுணை.

உ

குருவே துணை.

சௌரிபாளையம்

# ஸ்ரீ இராமலிங்கத்தேவரவர்களின்

# சரித்திரச்சுருக்கம்.

---

வெண்பா

சிரவையிரா மானந்தத் தேசிகன்றாட் கன்பு
விரவு மிராமலிங்க மேலோன்—கரவில்புகழ்க்
காதை படித்துமகிழ் காதலுடை யார்களெல்லாம்
வாதைதவிர் பேறடைகு வார்.

வசனம்.

பூமகள் முகமெனப் பொலிந்து தோன்றும், தேமலி செந்தமிழ்த் தெய்விக நாட்டின் ஒரு பிரிவாகி, மலைவளம், பொழில்வளம், நீர்வளம், நிலவளம், பயிர்வளம், குடிவளம் முதற் சகலவளங்களும் செழித்தோங்கும் கொங்குநாட்டின்கண் திருப்பேரூர் என்ற மேலச்சிதம்பரத் தலத்தின் வடகீழ்த்திசையிலுள்ள சௌரிபாளையம் என்னும் சிறுபதியில் மறவர்கள் குடியிற் றலைசிறந்து ஸ்ரீ மருதாசலாதிபதியாகிய முருகக்கடவுளின் மீது அன்புமிக்கொழுகிய நாராயணத்தேவர் என்னும் புண்ணியசீலர், தமது உத்தமபத்தினியுடன் ஆற்றிவந்த அருந்தவப்பயனைக் கலியுகம் சகூகூகூ-வதாகிய பிரபவ௵ கார்த்திகை௴ திருவோண நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில், ஓர் ஆண்குழந்தை உதித்தது.

அத்தகைய பேறுபெற்ற தாய் தந்தையர்கள் அளவிலா மகிழ்வுடன் அதற்குரிய முக்கியச்சடங்குகளையியற்றி அருமையுடன் இராமலிங்கம் என நாமகரணஞ் சூட்டி வளர்த்துவருவதாயினர். அப்பாலன் கல்விப்பயிற்சியினு னும், பூர்வபுண்ணியத்தொடர்பினுலும், நல்லொழுக்கங் களில் நிரம்பி, மருதமலைக் கடவுளினின்மீ துரிமைபூண்டும், யவ்வன பருவத்தில் விவாகம் நடத்தக்கொண்டு இல்லற வொழுக்கத்தி லமைந்து ஐயமிடுதல், பிதுர்பூசை முத லான கடமைகளை நடத்தியும் வந்தனர்.

தந்தை தாயார்களுக் கியற்றவேண்டிய கடமைகளை அவ் வக்காலங்களிலியற்றி, அன்னையும், அப்பனும் ஆன வர் முருகக்கடவுளே யென்னும் உறுதிபூண்டொழுகியும், தாமரையிலை நீர்போல் உழவுத்தொழில், வியாபாரமுதலிய விவகாரங்களை நடத்தியும் வந்தனர். இவரது நன்ன டக்கையையும் சாந்த சத்திய ஆசார முதலிய குணங்களை யும் கண்டு அந்நகர்வாசிகளும் ஏனையரும் வியப்பும் களிப் பும் கொண்டனர்.

இவ்வாறு இராமலிங்கர் இருந்துவருங்கால் பூர்வ புண்ணியத்தின் தூண்டுதலால், தமக்கு உண்மையுபதேசம் உதவவல்ல சற்குருவைப் பெறவேண்டுமென்ற விருப்பத் துடன் ஆராய்வதாயினர்.

உலக இன்பங்களை உண்மையாகக்கொண் டுழலும் சாமானியர்களை யொருபொருளாக மனத்தில் மதியாத விவேகத்துடனிருந்த இவர், திருப்புகழ்ச்சுவாமிகளென் றும், முருகதாசசுவாமிகளென்றும்வழங்கும், மகான் வண்ணச்சரபம் ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகளது திரு வருளநுக்கிரகச் செல்வராகி, சிரவணபுரத்தின்கண் பல்

லாயிரந் தொண்டர்களுக்குக் கருணைபாலித்து விளங்கும், அகஸ்தியகலாமிசரான, ஸ்ரீலஸ்ரீ - இராமானந்தசுவாமிகளைக் கண்டு பணிந்து, தமது குறைகளை விஞ்ஞாபித்துக் கொண்டனர். சுவாமிகளும் இவரது பக்குவவிசேடத்தையுணர்ந்து உபதேசம் புரிந்து சன்மார்க்க நெறிகளை விளக்கித் தமதுவசமிருந்து ஓர் வேலாயுதம் வழங்கி அதனை அநுதினமும் நியதியாகப் பூசிக்கும்படி ஆக்ஞாபித்து அனுப்பினர்.

அதுமுதலாக இராமலிங்கர் விடாப்பற்றுடன் அநுட்டித்தும், சற்குருநாதருடைய திருவுருவத்தை *அகண்ட சைதன்யத்தின் கருணைச்சகள மென்னும் உறுதிப்பாட்டுடன் இடையறாது தியானித்து மனச்சான்றான பல அநுபூதிகள் பெற்றும், விவகாரத்தில் நேருகிற ஒவ்வொரு முக்கிய விஷயங்களையும் பகிர்முகத்தில் குருசந்நிதியில் விண்ணப்பித்தும், கிடைக்கும் உத்தரவுப்படியே நடத்தி இனிதுறக்காணும் நிலையிலமைந்தனர்.

"நல்லா ரொருவ ருளரே லவர்பொருட், டெல்லார்க்கும் பெய்யுமழை" என்ற முதுமொழிக்கிணங்க இவரால் சௌரிபாளையத்திலும் மற்றும் அணுக்க நகர்களிலும் பலர் கொலைபுலையில்லா விரதங்கொண்டு பூசை தியான முதலிய நெறியிலொழுகுங் கடமை அமைந்து விளங்குவதாயினர். சிரவணபுரத்தில் தமது குருநாதர் சந்நிதிக்கு அடுத்தடுத்துச் சென்று பணிந்து அருள்மொழிகளைச் செவிமடுத்துச் சிந்தித்து அநுட்டிப்பதும், சந்நிதானத்தில்

* அப்பூதிஅடிகள் திருநாவுக்கரசு சுவாமிகளையும், மதுரகவியாழ்வார், சடகோபாழ்வாரையும், தத்துவராயர், சொரூபானந்தரையும் பாவித்ததுபோ லென்க.

காயிகமாகிய தொண்டுக ளியற்றுவதுந் தவருது செய்து வந்தனர்.

பரம்பரையில், பின் பல்லாயிரந் தொண்டர்கள் பயன் பெறுதற் கேதுவாக இவர் தமது குருநாதர்முன்பு "எவ் வுலகத்தும் யாருக்கும் எளிதில் அடைய முடியாததான, சண்மத சமயாதீத அத்துவித உண்மைகளைப் பலர்கேட்டு ஈடேறும்படி, நமது குமாரக்கடவுளுக்குரியதென்று வழங் கப்பெறும் சுக்கிரவாரத்தில் உபந்நியாசவடிவிற் பிரசிங் கித்தல் சாலநலம்" என்று கூறி வேண்டிக்கொண்டனர். அவ்வாற்றிற்கு ஸ்ரீ இராமானந்த சுவாமிகள் அநுமதி கொடுத்து, தமது பிரதான அடியார்களைக் கொண்டு பிரதி சுக்கிரவாரங்களிலும், பக்தி வைராக ஞான விஷ யங்களைப்பற்றிய உபதேசப் பிரசங்கங்கள் இனிது நடத்தி வரும் வழக்கம் ஏற்பட்டு இன்றும் நடப்பதாயிற்று. காக முறவு கலந்துண்பது போன்று, இவர் தாம் பெற்ற இன் பம் பலரும் பெறவேண்டும் என்னும் உரிமையினுல் இத் தகைய பேரறத்தைப் பிரேரேபித்து முற்றக்கண்டனர். சிரவணபுரத்தில் ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகளால் முன்னமே யமைக்கப்பட்டுள்ள தண்டபாணி மூர்த்தியின் ஆலய முகப்பில் அழகிய கோபுரத்திருப்பணி தம் சொந்த கைங்கரியமாக இயற்றி முடித்தனர்.

சௌரிபாளையத்தில் தமது ஆன்மார்த்தமாக ஓர் அழகிய தண்டபாணிக்கடவுள் திருவுரு சிற்ப விதிப்படி செய்து அங்கு அரிய ஆலயம் அமைத்து பிரதிட்டை நடத்தி அதற்குரிய தீர்த்தகூபம் மடைப்பள்ளி நந்தவன மும், நித்திய நைமித்திகங்கள் எந்நாளுங் குறைவின்றி நடப்பதற்கேற்ற பூமிகளும், ஏற்பாடு செய்தும், தினமும்

அதிகாலையில் ஸ்நான அநுட்டானங்கள் முடித்து அபி ஷேக அலங்கார ஆராதனைகள் தியான செபங்கள் தாமே இயற்றியும் வந்தனர்.

தமது வயலில் நடுவதற்காக வொருகாலம் விசால மாகக் கரும்பு விதைகள் பரப்பி வைத்தனர். அப்போது அவைகளை நடுவதற்குத் தண்ணீரின்றி வருந்த நேர்ந்த தால் தேவர் தமது குருநாதரை மனத்தில் நோக்கி, "உன் னுடைய பூமிகள் நீரின்றி நஷ்டப்பட நீ செய்தால் அதற்கு யான் என் செய்வேன்" என்று உருகி விண்ணப்பித் திருக்கையில், மேற்கே நெடுந்தூரத்திலுள்ள அணையில் ஒரு செல்வவான் பெரும் பொருட் செலவு செய்து தன் னது கிராமத்துக்குக் கொண்டுபோய்ப் பாய்ச்சுதற்காக மறித்துக் காவலாளர் காப்பில் வைத்த நீர்ப்பெருக்கம் நள்ளிரவில் யாருக்குந் தெரியாதவாறு திடீரென்று உடைப்பெடுத்து ஆற்றில் பிரவாகமாய் வருவதாயிற்று. அது விவரம் இராமலிங்கர் மனத்தில் திருவருள் விளக்க லால் எழுந்துபார்க்கையில் நீர் வரும் வியப்பைக் கண்டு பெருமகிழ்வுடன் தமது வயல்களுக்கும் பிறவயல்களுக்கும் செழிப்புறப் பாய்ச்சி கரும்பு நட்டு மிக மகிழ்வுற்றனர்.

இவரது தெய்வபக்தியை வீணென்று கருதி அவமதித் திருந்த சிலர் இவ்வியப்புக்கண்டு தமது குற்றத்தைச் சொல்லி வணங்கி யுரிமையுற்றனர். உமையவளின் தாகத் திற்கு மலைதுளைத்துப் புனல் கொணர்ந்த முருகப்பெரு மானே இவருக்கும் இவ்வாறு அணைசிதைத்து நீர்பாய்ச்சி யருளினர். பின் சிலகாலந் தாண்டி, தமக்குப் புதிதாய் வீடு கட்டத் துவக்கி வேலை நடக்கையில் அளவிலாப் பெரு மழை பெய்தது. அருகிலுள்ள பல வீட்டுச் சுவர்கள்


இடிந்து விழுந்தன. அப்போது புதிதாயமைந்தும், ஈரம் உலராமலும், மேல் மூடாமலும் உள்ள சுவர்கள் இடிந்து விட்டால் என்செய்வதென வருந்தித் தேவர் தெய்வ சிந்தனை செய்திருந்தனர். சுவர் சிறிதும் சேதப்படாமல் திருவருள் காத்தது. இரவெல்லாம் மழைபெய்வதும் பக லெல்லாம் வெய்யில் எறிப்பதும் சுவர்வேலை நடத்துவது மாகவே வீட்டுவேலை முடிந்தது.

ஒரு நாள் கூலிக்குக் கையில் பொருள் முட்டுப்பட்ட தால் குருநாதனை நோக்கி, இராமலிங்கர், "சும்மா இருந்த என்னை விவகாரத்தில் இழுத்துவிட்டு இப்படிச் சோதிப் பது முறையோ யாரிடத்தில் யான்போய்ப் பொருள் கேட்பேன்" என்று விண்ணப்பித்துக்கொண்டிருக்கையில் திடீரென்று அறிமுகமுள்ள ஒரு மனிதன் அன்பாய் நூறு ரூபாய் கொண்டுவந்து கொடுத்து, "இதைத் தாங்கள் செலவுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். இப்போது எனக்கு அவசரமில்லை. தங்களுக்குச் சவுகரியமானபோது கொடுக்கலாம்," என்று கூறினன். அது கண்டு வியந்து மனமுருகி எடுத்த வேலையை நிறைவேற்றினர். தமது சுதந்தரத்தை விட்டு குருநாதர் நேரில் உத்தரவு செய்த மொழியில் கட்டுப்பட்டு உரிய காலத்தில் நடந்து தமக்கு நேர்ந்திருந்த பொருட்கடன்தொகைகளை ஒருகாலத்தில் எளிதாக நிவிர்த்தியுறக் கண்டனர்.

சிரவணபுரம், கௌமாரமடாலயத்தில் ஸ்ரீ சற்குரு நாதருடைய திருவருட் குமாரராய் விளங்கி பல்லாயிரம் தமிழ்க்கவிகள் பாடியும் சுக்கிரவாரச் சபையில் ஞானோப தேசசார வசனமழைபொழிந்தும் விளங்கும் ஸ்ரீ கந்தசாமி சுவாமிகளை அன்புடன் வரவேற்று தமது பதியிலுள்ள

உ

குருவே துணை.



சௌரிபாளையம்

ஸ்ரீ இராமலிங்கத் தேவரவர்கள்.

தண்டபாணிக் கடவுளுக்கு அரிய தோத்திரப்பதிகங்கள், சந்தப்பாக்கள், இயற்றி அரங்கேற்றுவித்துப் பணிந்து மகிழ்வுற்றனர். இன்னும் பல அன்பர்களாலும் தோத்திரப் பாடல்கள் ஓதித்துதிக்கவும் வினவி ஆனந்தித்தனர். தமது சற்குரு நாதரால் ஏற்படுத்தியபடி கொலைபுலையில்லா விரதநிரூபண கங்கணம் வலக்கரத்திற்றரித்தும், தேசிகன்றிருவடி தரிக்குந்தலையில் ஏனையர் தீண்டி சவுளமியற்றுதல் கூடாதென்னும் உறுதியினால் தலையில் சிகை வகித்தும், ஊர்த்துவ அங்கத்தில் நிறைந்த திருநீற்றுத் தூளனமும் கழுத்தில் உருத்திராக்கமாலிகையும் நெற்றியில் குங்குமதிலகமும் விளங்க அன்புபெருக்கெடுத்து அழுதகண்ணும் தொழுதகையுமாய் நின்று நாத்தழுதழுத்து வார்த்தைகள் கூறும் இராமலிங்கரது தோற்றம் நல்லோர் மனத்தை ஆனந்தம் உறச்செய்வது உண்மை.

நடுநாட்டுத் திருவாமாத்தூரில் ஞானசமாதி கொண்டுள்ள ஸ்ரீ திருப்புகழ்த் தண்டபாணி சுவாமி சந்நிதியடைந்து கண்ணாரக்கண்டு வாயாரவாழ்த்தித் தலையாரவணங்கிக் கையாரத் தொண்டுகள்புரிந்து இருபத்தைந்தாவது மகாகுருபூசை விழாவில் அடியவர் குழாத்துடன் அளவளாவிப் பிரசாதம்பெற்று தமதுபதி சேர்ந்தனர்.

சிரவணபுரத்தில் நடைபெற்ற, சதுர்வேத சித்தாந்த சண்மத சமயாதீத அத்துவித கௌமார சபாமண்டபாலயத்திருப்பணிக்குப் பெருமகிழ்வுகொண்டு முயன்றும் இருந்தனர். இவ்வாறு தமக்கும் பிறர்க்கும் தவஞ் சிறக்கும்படி தமிழுலகத்தில் விளங்கியிருந்த ஸ்ரீ இராமலிங்கத் தேவரவர்கள், திருவருட்செயலால் கலியுகாதி ருoங்ச, வதாகிய ஆங்கிரச ஞூ மார்கழிமீ கசஉ புதவாரம் சுக்ல

பக்ஷப் பிரதமை பூராட நக்ஷத்திரத்தில் தூலசரீரத்தை உலகில் அன்பர்கள்பணிய விடுத்து சூக்கும வடிவுடன் அகண்டானந்தப் பெருவெளி மயமான பரமசற்குருநாதருடைய திருவருளிற் கலந்துகொண்டனர்.

பின்னர் பலரும் பிரிவாற்றாது வருந்தித் தேறி அங்குள்ள தண்டபாணி ஆலயத் திருமதிலுக்குள் தென் மேற்றிசையில் சமாதிசெய்து ஆராதிப்பதாயினர். இத் தகைய தவமமைந்த இராமலிங்கத்தேவரவர்களின் ஆன் மார்த்த தண்டபாணி யாலய பூஜையும், அவருடைய சமாதி வழிபாடும், அவரது தவகுமாரராகிய முருகதாசராலும், மற்றும் அணுக்கத் தொண்டர்களாலும் நடத்தப் பெற்று வருகின்றன. சிரவணபுரத்திலிருக்கும் ஸ்ரீ மத் கந்தசாமி சுவாமிகளாலும், திருவாமாத்தூரிலிருக்கும் ஸ்ரீ தண்டபாணி சுவாமிகளது குமாரர் தி. மு. செந்தி ஞயகம் பிள்ளையவர்களாலும், இவரது ஐக்க விஷயத்தைப் பற்றிய பரிபூரணப்பாக்கள் ஓதி யரங்கேற்றப் பெற்றன. அப் பாக்கள் இதனடியில் சேர்த்து அமைக்கப்பெற் றுள்ளன.

தெய்வபக்தி, குருபக்தி, சதாசாரங்களில் விருப்ப முள்ள உத்தமர்கள் கண்டு மகிழவேண்டி இவரது சரித் திரமும் சுருக்கி யிங்கு எழுதி தோத்திரப் பிரபந்தங் களுடன் சேர்க்கப்பெற்றது. சுபம்.

தெய்வமேதுணை.

24

உ

குருவே துணை

# பரிபூரணபாக்கள்.

---

சிரவணபுரம், கௌமாரமடாலயம்

## ஸ்ரீமத்-கந்தசாமிசுவாமிகள்

இயற்றிய

### அறுசீர்விருத்தங்கள்.

பாராரும்புகழ்மருதா சலக்குகவேள் கழற்றுணை மெய்ப் பத்திவாய்ந்த, நாராயணன்செய்தவத் திரளனைய வுருக்கொடுநா னிலத்தில்வந்தாய், தாராளச்சிந்தையினிற் பொறுமைகல்வியறிவொழுக்கஞ் சாந்தியாதி, நீரார்ந்தோ யிராமலிங்கப் பேர்புனைந்துபத்தியின்ப நிறைவுற்றோயே.

திரம்பொருளென்றிருவினையா ருடலமைபுன்புலபோ கத் திளைப்புற்றேதந், தரம்பொருளென்றிசைத்துழல்வார் தமைப்பொருளாக்கணியாதோய் தகைதோய்ஞான, வரம் பொருளென்றுறமுயல்வா ரேத்துமிராமானந்த வள்ளலே மெய்ப், பரம்பொருளென்றுன்னு முழுத் தவப்பெருக்கா லநுபவம்பற் பலவாய்ந்திட்டோய். (உ)

நவைதோன்று மாயையைச்சுட் டொழிக்குமிரா மா னந்த நாதன்ஞானச், சுவைதோன்றுமுபதேசங் கொளு ஞ்செவியாய் சிரவையிற்சுக் கிரவாரஞ்சா, லவைதோன்றற் காதரமாய் நின்றோய்தண்டணிகுமர னாலயப்பாற்,

குவைதோன் றுபொன்கொடணிக் கோபுரமார் வத்தியற் றங் கொற்றத்துயோய். (௩)

கற்றமைந்தபெரியரினங் கலந்துறநஞ்சிரவையினிற் கௌமாரப்பேர், பெற்றமைந்த மண்டபங்கோ யிற்பணி யாதியமுடித்துப் பிரவேசச்சீர், முற்றமைந்தவைபவச்சீ ருன்னுடனுற்றேகாண முன்னினேநிற், கெற்றமைந்த திடையிலெமை விடுத்தேகற்குன்னுரிமை யிதயமந்தோ. ()

தென்மொழிமா முனிவரனென் றுலகேத்து நங் குருதே சிகன்வாய்விண்ட, பொன்மொழியைநன்முடியிற் புனைந்தோம்பி யின்பமிகப் பூப்போய்நின்சீ, ரென்மொ ழியினளவைத்தோ நீயடைந்தோர்தமைத்தேற்று தியாக் கைநீத்த, தென்மொழிமெய்யடியருடன் வாழ்தல்கதி தனினுமின்பென் றெண்ணுதச்சோ. (ரு)

தண்டணிகைப்பரமகுரு பரநாதனீயுடலந் தளர்ந்து செய்யுந், தொண்டகமாற்றுதுகொலோ சானுமெனக் கொண்டபெருந் தோற்றத்தாலோ, மண்டலத்தினின்பணி யைப் பக்குவமாரோயிர்க்கு வழங்கவோதன், புண்டரிகத் தாட்டுணையி னுனைக்கொண்டானுளவறியப் புகலுவாயே.()

பாவிக்குமுன்னுரத்தின் பாவனையாற்பாவகமெய்ப் பயனுற்றேநீ, சேவிக்கும்போதினினந் தேசிகனுர்வடிவ மொப்பத் திகழுமாலென், னுவிக்குற்றமைதுணைவ; **விராமலிங்க!** வன்பருரு ககத்தராகக், கூவிக்குன்றுளிர்ப தத்தி னுனைமறைத்தானேசேவற்கொர்டியோனச்சோ.(எ)

மான்காணம்புலியீரெண் கலைபரப்பியெழுந்தவுவா மருவுநாளில், வான்காணப்பெற்றேன்விண் மீன்காணும்

அமாவாசை வாய்க்கண்டாற்போ, லான்காணப் பெறு கன்றினின்சவுரிபாளையத்துக் கணுகுங்காலே, நான்காண வருநீயின் றேன்காணவந்திலையோ நவில்வாயையா. (அ)

நிலனகத்தினின்றெளிர்ந்து தன்னத்திலுன்னையென்று நீங்காதேற்ற, பொன்னடிகொளிராமானந் தப்பெருமான்றிருவருட்சீர் பொலிந்துவாழ்க, நன்னலப்பொன்கொடுநீசெய் தண்டபாணிக்குரவ னயக்குங்கோயில், பன்னரும்பலன்பர்பணி கொண்டருளின்பருளியென்றும் பல்கமாதோ. (௯)

நிகழ்தருமாங்கீரசப்பே ராண்டினின்மார்கழித்திங்கணோர்பன்னலிற், றிகழ்புதன்றேய்முதற்றிதிபூ ராடவிண்மீனிடைமகரந் தீருமேல்வை, சகமலிசீர்ச்சிரவையிரா மானந்ததேசிகன்மெய்த் தாசனுநற், புகழ்பெறு மிராமலிங்கன் சமாதியுற்றானின்பமிகப் பொலிந்துவாழி. (௧0)

---

திருவாமாத்தூர்க் கௌமார மடாலயம்

## ஸ்ரீ தி. மு. செந்திநாயகம்பிள்ளையவர்களால்

இயற்றிய

## எழுசீர் விருத்தங்கள்

சிரவணப்பெயர்ப் புரத்திராமானந்த தேசிகன்றிருத்தாளே, கரவறத்தினங் கருதியேத்தித்தொழுங் கடமையிற்றிறம்பாதான், பரவுசீர்ச்சவு ரிப்பதியிடைகுரு பரன்றிருத்தளிசெய்தே, விரவுபல்வகை நலங்களும் புரிந்தவன் விளங்குசத்தியசீலன். (௧)

சரியையாதிநாற் பாதமுந்தழுவிடுந் தனித்திறற்கவு
மாரப், பெரியர்கூடுமெய்ச் சுக்கிரவாரநற் பெருஞ்சபை
தனிலென்று, முரியசாதனக் கேள்வியாரமுதினை யுண்டு
தேக்கெறிசிந்தை, விரிவகன்றொருப் படுநலோ
னிராமலிங்கப் பெயர்மிலை தேவன். (உ)

கனங்கொள்வண்ணவான் சரபனுக்கமைந்ததோர்
கறுப்பவேற் கவண்டன்போன், மனந்தனிற்குரு பத்தி
கொண்டவன்மொழி மறைமொழியினுமேலென், றனந்
தரம்புரிந் துலகியலருளிய லாமிரண்டினுஞ்சீர்த்தி, தினம்
பல்வாறடைந் தவனயில்வேற்குகன் றிருவுருவருச்சித்
தோன். (௩)

கலியையாயிரத் தொருமுப்பானான்கெனக் கவினாங்
கீரசவாண்டில், மலியுமார்கழி யோர்பதினான்கினில்
வயங்குபூராடத்திற், குலிசர்போற்றுசண் முகப்பிரான்
றிருவருட் குறிப்பினாலுடனீங்கி, நலிவிலாக்கதி யடைந்
தனனடியவர் நாடிவாழ்த்திடமாதோ. (௪)

குருபரன்றிரு வடிப்பணிபுரிந்தனேன் குளிர்மலர்
விழிநோக்கம், பெருகவாய்ந்தமே லவர்தமதுடல்வினைப்
பிரிவினாலகன்றாலும், உருகுமுண்மையன் புருவமாஞ்சூக்
குமவுடலருந்தவசீலர், அருகுகண்டிட வுறுமெனல்
இராமலிங்கன்கதி சொலும்வாழி. (௫)

126:38 211SP
187

முற்றிற்று

குருபாதமேகதி.

125574